கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2025–ம் வருடம் ஜுலை மாதம் 02ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.213/2018
இன்
அசல் வழக்கு எண்.39/2018

* * * *

1. ஹேமலதா
2. சத்திய விதுரர் ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1. தங்கேஸ்வரன் (இறப்பு) ... 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி
2. மீனாட்சி
3. நாகேந்திரன்
4. கற்பகம்
5. திருமுருகன் ... 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது 17.06.2025–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அடைக்கலம் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்ட நிலையிலும்,

இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

இந்நிர் மனுதாரர்கள்/வாதிகளுக்கு மனுச்சொத்தில் உள்ள அமைதியான அனுபவத்தினை இந்நிர் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜென்டுகளோ எந்தவிதமான இடையூறும் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு முடியும் வரை இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இம்மனு முடியும் வரையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு தோன்றா நிலையில் ஒருதலைபட்ச உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்கள்/வாதிகளால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை** :–

இந்நிர் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள

இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) இந்நிர் மனுதாரர்கள்/வாதிகளுக்கு மனுச்சொத்தில் உள்ள அமைதியான அனுபவத்தினை இந்நிர் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜென்டுகளோ எந்தவிதமான இடையூறும் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு முடியும் வரை இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இம்மனு முடியும் வரையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு தோன்றா நிலையில் ஒருதலைபட்ச உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில், பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை இம்மனுவின் எதிருரையாக பாவித்துக்கொள்ளவேண்டி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. தீர்வு:–**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலினை

செய்யப்பட்டது. இம்மனு சம்பந்தமாக மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3.1) மேலும், கட்டளை 39 விதி 1, 2 CPC கீழ் மனுதாரர் நிவாரணம் பெறவேண்டும் என்றால்,

(i) மனுதாரரின் வழக்கிற்கு முதற்தோற்ற வழக்கு இருக்கவேண்டும்.

(ii) மேற்படி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாருக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்பதை நிருபணம் செய்யவேண்டியது அவசியமானதாகும். ஆனால், இம்மனுவில் மேற்படியான நிபந்தனையை நிரூபணம் செய்யும்விதமாக மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எவ்விதமான வாய்மொழி சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தவில்லை.

3.2) மேலும், பொதுவாக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்படும் வழக்குகளில், இடைக்கால தடையுத்தரவு வழங்குவது, அசல் வழக்கில் கோரியுள்ள பிராதான

பரிகாரத்தை வழங்குவது போன்றது என்றும், எனவே விதிவிலக்கான வழக்குகளைப் பொறுத்து மட்டுமே இடைக்கால தடை உத்தரவு வழங்க வேண்டும் என்பது முன்தீர்ப்புகளினால் தீர்மானிக்கப்பட்ட விதி ஆகும்.

3.3) இவ்வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ள நிலையில், இந்நிர் மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரமானது மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா இல்லையா என்பது வழக்கின் முழுவிசாரணைக்கு பின்தான் தீர்மானிக்க இயலும். எனவே மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள இடைக்கால தடையுத்தரவு பரிகாரம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு வழங்க இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள இடைக்கால தடையுறுத்தரவு கட்டளை பரிகாரம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 02.07.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.07.02 15:25:27 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு** :–

**1) மனுதாரர்கள் தரப்பு சாட்சி:** இல்லை

**2) மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**:

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 13.12.2007ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் – அசல் |
| ம.சா.ஆ.2 | 13.12.2007ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் – அசல் |
| ம.சா.ஆ.3 | 06.05.1980ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 19.11.2017ம் தேதியிட்ட 1401–பசலிக்கான அடங்கல் கணக்கு – உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | 08.02.1996ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் – சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | 19.11.2017ம் தேதியிட்ட 1424 பசலிக்கான அடங்கல் கணக்கு – உண்மை நகல் |
| ம.சா.ஆ.7 | பட்டா எண்.3024க்கான 10(1) சிட்டா – கணிணி நகல் |
| ம.சா.ஆ.8 | 19.11.2017ம் தேதியிட்ட 1425 பசலிக்கான அடங்கல் கணக்கு – உண்மை நகல் |
| ம.சா.ஆ.9 | பட்டா எண்.352க்கான 10(1) சிட்டா – கணிணி நகல் |

**<u>3) எதிர்மனுதாரர்கள் சாட்சிகள் :</u>** இல்லை

**<u>4) எதிர்மனுதாரர்கள் சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 27.03.1940ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் – அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 27.04.2017ம் தேதியிட்ட 1387–பசலிக்கான அடங்கல் கணக்கு – உண்மை நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 27.02.1980ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் – அசல் |
| எ.ம.சா.ஆ.4 | 1390 பசலிக்கான கிஸ்தி இரசீது – அசல் |
| எ.ம.சா.ஆ.5 | 15.05.2017ம் தேதியிட்ட 1396 பசலிக்கான அடங்கல் கணக்கு – உண்மை நகல் |
| எ.ம.சா.ஆ.6 | கிஸ்தி இரசீதுகள் – அசல் 12 எண்ணம் |
| எ.ம.சா.ஆ.7 | தாவாச்சொத்திற்கான புகைப்படங்கள் 8 எண்ணங்கள் மற்றும் சிடி 1 எண்ணம் |
| எ.ம.சா.ஆ.8 | தாவாச்சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் – நகல் |
| எ.ம.சா.ஆ.9 | 15.12.2016ம் தேதியிட்ட உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரின் குறிப்பாணை – உண்மை நகல் |
| எ.ம.சா.ஆ.10 | 30.11.2017ம் தேதியிட்ட உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரின் விசாரணை அழைப்பாணை – உண்மை நகல் |

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.07.02 15:25:42 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.213/2018
இன்
அசல் வழக்கு எண்.39/2018
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 02.07.2025